மூப்பிலாத் தேன் தமிழில்

# இறவாக் கவிதைகள் படைத்திட்டவர் கவியரசர் கண்ணதாசன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஜீன் 25-**

**கவியரசர் கண்ணதாசன் பிறந்த நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இறவாக் கவிதைகள் படைத்திட்டவர் என்று பாராட்டியுள்ளார்.**



இது தொடர்பாக கவியரசு கண்ணதாசன் அவர்களின் பிறந்த நாளையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

மூப்பிலாத் தேன்தமிழில் இறவாக் கவிதைகள் படைத்திட்ட கவியரசர் கண்ணதாசன் அவர்களது பிறந்தநாளில் அவரைப் போற்றி வணங்குகிறேன்!

காலத்தால் வெல்ல முடியாத மாமேதைகள் தங்கள் கலைப் படைப்புகளால் உலகம் உள்ள வரை நம் உள்ளத்தில் நிலைத்து நிற்பார்கள்!

இவ்வாறு முதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

பிறந்த நாளையொட்டி - இன்று

# முன்னாள் பிரதமர் வி.பி.சிங் சிலைக்கு மாலை!

## சென்னையில் அமைச்சர்கள் அணிவிக்கிறார்கள்!

*சென்னை, ஜூன் 25-*

மேனாள் இந்தியப் பிரதமர் சமூகநீதிக் காவலர் வி.பி. சிங் அவர்களின் 95ஆவது பிறந்த நாள் - இன்று வருவதையொட்டி மலர்தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

தமிழ்நாடு அரசின் சார்பில், மேனாள் இந்தியப் பிரதமர் சமூகநீதிக் காவலர் விஸ்வநாத் பிரதாப் சிங் என்னும் வி.பி.சிங் அவர்களின் 95 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, அமைச்சர் பெருமக்கள், இன்று (25.6.2025) காலை 9.30 மணியளவில் சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

வி.பி.சிங் அவர்கள் 1931ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25ஆம் நாள் அலகாபாத் நகரில் அரச குடும்ப வாரிசாகப் பிறந்தார். டேராடூன் கர்னல் பிரவுன் பள்ளியில் தமது பள்ளிப் படிப்பை முடித்த பின்பு, புனே பெர்குஷன் கல்லூரியில் பயின்று இளங்கலைப் பட்டம் பெற்றார். மேலும், 1950ஆம் ஆண்டு அலகாபாத் பல்கலைக்கழகத்தில் சட்டக் கல்வி பயின்று பட்டம் பெற்றார்.

வி.பி.சிங் அவர்கள் சட்டக் கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே காந்திய இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார். இதனைத் தொடர்ந்து, சர்வோதய சமாஜத்தில் இணைந்து, பூமிதான இயக்கத்தில் பங்கெடுத்துத் தமக்குச் சொந்தமான நிலங்கள் முழுவதை யும் தானமாக வழங்கினார். 1969ஆம் ஆண்டு உத்தரப்பிரதேச சட்டமன்ற உறுப்பினர், 1971 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர், 1974 ஆம் ஆண்டு இந்திரா காந்தி மந்திரி சபையில் வர்த்தகத் துறை துணை அமைச்சர் போன்ற பல்வேறு பதவிகளை வகித்தார்.

1980 ஆம் ஆண்டு உத்தரப் பிரதேச மாநில முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அடித்தட்டு மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத் திட்டங்களை கொண்டு வந்தார். வி.பி.சிங் அவர்கள் 1984 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் நிதியமைச்சர் மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆகிய பதவிகளை வகித்தார். இதனைத் தொடர்ந்து, 1989 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தமிழ்நாட்டு மக்களின் வாழ்வதாரப் பிரச்சனை யான காவிரிப் பிரச்சினைக் காக நடுவர் மன்றம் அமைத்தார். சென்னையில் அமைந்துள்ள உள்நாட்டு விமான நிலையத்திற்கு, பெருந்தலைவர் காமராஜர் பெயரையும், பன்னாட்டு விமான நிலையத்திற்கு, பேரறிஞர் அண்ணாவின் பெயரையும் சூட்டினார். அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்குப் பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் என்ற நீண்டகாலக் கோரிக்கையை நிறை வேற்றினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் "அரசியல் நாகரீகத்துககும், பண்பாட்டுக்கும், உயர்ந்த லட்சியங்களுக்கும் அடையாளச் சின்னமாக விளங்கிய வர் வி.பி.சிங்" என்று கூறியுள்ளார்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதற்காக B.P. மண்டல் அவர்கள் தலைமையில் இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தால் சமூக ரீதியாகவும், கல்வியிலும் பின்தங்கிய பிற்படுத் தப்பட்ட வகுப்பினர் என்று அழைக்கப்படும் சமூகத்திற்கு அரசுப் பணியிடங்களில் 27 விழுக்காடு இடஒதுக்கீட்டை வழங்கலாம் என்ற பரிந்துரையைச் செயல்படுத்தியவர் சமூகநீதிக் காவலர் வி.பி. சிங் அவர்கள்.

வி.பி.சிங் அவர்களின் புகழுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள அன்னாரது திருவுருவச் சிலை 27.11.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் திரு.வி.பி.சிங் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 25 ஆம் நாள் அரசு விழாவாக மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி, 25.6.2025 அன்று மேனாள் இந்தியப் பிரதமர் சமூக நீதிக் காவலர் வி.பி. சிங் அவர்களின் திருவுரு வச்சிலைக்கு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

---

தமிழ் உள்ளிட்ட பிற செம்மொழிகளை புறக்கணித்து

# சமஸ்கிருதத்திற்கு மிதமிஞ்சிய நிதி ஒதுக்கீடு செய்வதா?

## மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா கண்டனம்!

*சென்னை, ஜூன் 25-*

ஒன்றிய அரசு சமஸ்கிருதத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



2014-15 முதல் 2024-25 வரையிலான பத்து ஆண்டுகளில் ஒன்றிய அரசு சமஸ்கிருத மொழியைப் பரப்ப ரூ.2532.59 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. இது தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் ஒரியா ஆகிய ஐந்து செம்மொழிகளுக்குச் சேர்த்து ஒதுக்கப்பட்ட ரூ.147.56 கோடியை விட 17 மடங்கு அதிகமாகும் என்று தகவல் அறியும் உரிமை (RTI) மூலம் பெற்ற தகவலை ஆங்கில நாளிதழ் ஒன்று வெளியிட்டுள்ளது.

ஆண்டுக்குச் சராசரியாகச் சமஸ்கிருதத்திற்கு ரூ.230.24 கோடி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் மற்ற ஐந்து செம்மொழிகளுக்குச் சராசரி ஆண்டு நிதி ரூ.13.41 கோடி மட்டுமே ஒன்றிய பா.ஜ.க. அரசு ஒதுக்கி தனது வெறுப்புணர்வை வெளிப்படுத்தியுள்ளது. இந்த பாரபட்சமான போக்கை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

2004ல் முதன் முதலாகச் செம்மொழி அங்கீகாரம் பெற்ற தமிழுக்கு, மொத்தம் ரூ.113.48 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. - இது சமஸ்கிருதம் பெற்ற தொகையை விட 22 மடங்கு குறைவு.

இந்தியாவின் மக்கட்தொகையில் 22% மக்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் ஒரியா மொழி பேசுகிறார்கள். ஆனால் சமஸ்கிருதம் பேசுபவர்கள் மிகவும் சொற்பமானவர்களே.

சமீபத்தில் மதுரையில் ஒன்றிய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா இந்தியாவின் தலைசிறந்த மொழி தமிழ் என்று பேசியது வெறும் பசப்பு வார்த்தைகள் மட்டுமே என்பதை இந்த புள்ளி விவரங்கள் வெளிப்படுத்துகின்றன.

தமிழ் மற்றும் பிற செம்மொழிகளுக்கு மொழிகளுக்கான உரிய அங்கீகாரம், நிதி மற்றும் வளர்ச்சித் திட்டங்களை ஒன்றிய அரசு உடனடியாக வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

அமைச்சர் பி.கே.சேகர்பாபு – அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ. முன்னிலை! கூ.பீ.ஜெயின் எம்.சி. தலைமை!

# வில்லிவாக்கம் மேற்கில் மாணவ - மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை - கல்வி உபகரணங்கள்!

## அமைச்சர் சி.வெ.கணேசன் - நடிகர் பாண்டியராஜன் வழங்குகின்றனர்!

*சென்னை, ஜூன். 25 -*

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞரின் செம்மொழி நாள் முன்னிட்டு செம்மொழி - 23, கல்விக்கு உதவுதல் முதல் கடமை! கலைஞரின் புகழுக்கு அது பெருமை! எனும் தலைப்பில் மாணவ - மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை - கல்வி உபகரணங்கள் வழங்கும் விழா நாளை (26.06.2025 - வியாழக்கிழமை) மாலை 4 மணியளவில், சிட்கோ நகரில் பகுதிச் செயலாளர், கூ.பீ. ஜெயின் தலைமையில் நடைபெறுகிறது.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ. வெற்றிஅழகன், கிழக்கு பகுதிச் செயலாளர் வே.வாசு, சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, டி.வி. செம்மொழி எம்.சி, வானவில் விஜய், லதா வாசு எம்.சி, ஆர்.வரதன், ஜி.ஜெ.பிரபு, எம்.சுரேஷ், வில்லிவாக்கம் மேற்கு பகுதிக் கழக நிர்வாகிகள் ஜெ.எஸ்.பிரபு, வி.து. இராமமூர்த்தி, பா.இளையா, ம.கலைச்செல்வி, ஐ.சி.எப். மு.சுரேஷ்பாபு, வில்லி வாக்கம் மேற்கு பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள் ஆர். தினதயாளன், க.சுகுமாறன், மா.அகிலன், பா.ஜானி, சொ.முருகேசன், ப.லோகு பாபு, கே.எஸ்.பாபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வில்லிவாக்கம் மேற்கு பகுதி, மாவட்டப் பிரதிநிதிகள் ஆர்.கோபாலகிருஷ்ணன், சிட்கோ ப.சுரேஷ் பாபு, ம.சுந்தர்எபி, கோ.மணி வேந்தன், மா.கபிலன், பா.தே.தீனதயாளன், க.மணி மாறன், எஸ்.கே.பி. தீபக்குமார், ஆ.சக்திவேல், பூ.சத்தியேந்திரன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன், நடிகர் பாண்டியராஜன் ஆகியோர் மாணவ - மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், தலைமை செயற்குழு உறுப்பினர், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் தலைவர் ப.ரங்கநாதன், வில்லிவாக்கம் தொகுதி தேர்தல் பார்வையாளர் ஓ.எ.நாகலிங்கம், கே. எஸ்.ரவிச்சந்திரன், பி.கே. மூர்த்தி எம்.சி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சங்கரி நாராயணன், எஸ்.மணிமுடி கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, வே.உமாகாந்த், பரிதி இளம் சுருதி எம்.சி, வழக்கறிஞர் இந்திராஜித், காஞ்சி வெ.பாஸ்கர், கோ. ஏகப்பன், தேவஜவகர், ஜி. மகாதேவன், புனிதவதி எத்திராசன் எம்.சி, இசட்.ஆசாத் எம்.சி,

சொ.வேலு எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, பா.ஸ்ரீராமுலு எம்.சி, டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ. நாகராசன் எம்.சி, டி.எஸ். பி.ராஜகோபால் எம்.சி, எம். டி.ஆர்.நாகராஜ், செ.தமிழ் வேந்தன், எம்.சாமிகண்ணு, வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ். ராஜசேகர், எஸ்.பன்னீர்செல்வம், கோ.மணி, பி.ஜெ.துளசிங்கம், லயன் பி.உதயசங்கர், வி.ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, எம்.இப்ராஹிம் கனி, அ.நிர்மலா தேவி, டாக்டர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி, இரா. கலைச்செல்வி மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், கழக முன்னோடிகள், பாக முகவர்கள் (பி.எல்.ஏ.2), பாக உறுப்பினர்கள் (பி.எல். சி) நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

94 வது வட்டக் கழகச் செயலாளர் சிட்கோ சேகர் நன்றி கூறுகிறார்.




> "உத்தரப் பிரதேசத்தில் பிறந்திருந்தாலும் ஒட்டுமொத்த இந்தியாவுக்குமான தலைவர் 'சமூகநீதிக் காவலர்' வி.பி. சிங் அவர்கள். சமூகநீதிப் பயணத்தின் வெற்றியில் அவர் என்றும் வாழ்வார் !"
>
> **மு.க.ஸ்டாலின்**
> தமிழ்நாடு முதலமைச்சர்

**சமூகநீதிக் காவலர்**

# வி.பி.சிங்

அவர்களின்

**95ஆவது பிறந்த நாள்**



தமிழ்நாடு அரசின் சார்பில்
மேனாள் இந்தியப் பிரதமர்
சமூகநீதிக் காவலர் **வி.பி.சிங்** அவர்களின்
திருவுருவச் சிலைக்கு

**மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,**
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற,
சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர்,
உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை
செலுத்துகிறார்கள்.

செ.ம.தொ.இ/647/வரைகலை/2025

**நாள் : 25.6.2025, புதன்கிழமை, காலை 9.30 மணி | இடம் : மாநிலக் கல்லூரி வளாகம், சென்னை**

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in | **இயக்குநர்**, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 600 009.


'புதுமைப் பெண்' 'தமிழ்ப் புதல்வன்' திட்டப் பயன்கள்!

# திருநங்கையர்களுக்கு நிபந்தனைகள் தளர்வு!

## தமிழ்நாடு அரசு ஆணை!

*சென்னை, ஜூன் 25 -*

திருநங்கையர்களுக்கு புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டங்களை விரிவு படுத்தி தகுதி நிபந்தனைகள் தளர்வு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசின் பெண்களுக்கான மேம்பாட்டுத் திட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த 'புதுமைப் பெண்' மற்றும் 'தமிழ்ப் புதல்வன்' திட்டங்களின் கீழ் பயன்பெறுவதற்கான தகுதி வரம்புகளில் அரசு பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் (தமிழ்வழியில்) 612 வகுப்பு வரை தமிழ்வழியில் படித்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை இருந்தது. இந்த நிபந்தனையை திருநங்கை, திருநம்பி மற்றும் இடைபாலினத்தவர்களுக்கு முழுவது மாக தளர்வு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசுப் பள்ளி மாணவிகளின் உயர்கல்வியை ஊக்குவிக்க 05.09.2022 அன்று 'புதுமைப் பெண் திட்டம்' தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் பயின்று உயர்கல்வி பயிலும் அனைத்து மாணவிகளுக்கும் பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு, தொழிற்படிப்பு ஆகியவற்றை இடைநிற்றல் இன்றி முடிக்கும் வரை மாதம் ரூ.1,000/ வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மாபெரும் வெற்றி யைத் தொடர்ந்து, மாணவர்களின் உயர்கல்வி சேர்க்கையை அதிகரிக்க, 09.08.2024 அன்று 'தமிழ்ப்புதல்வன் திட்டம்' தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் படித்த மாணவர்களுக்கு உயர்கல்வியில் மாதம் ரூ.1,000/ ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. மேலும், 'புதுமைப் பெண் திட்டம்' அரசு உதவி பெறும் தமிழ் வழிப் பள்ளி மாணவிகளுக்கும் 30.12.2024 அன்று விரிவு படுத்தப்பட்டது.

நாட்டிற்கே முன்னோடியாக, திருநங்கை, திருநம்பி மற்றும் இடைபாலினத்தவர்களின் நல்வாழ்விற்காகப் பல்வேறு புதுமையான திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இவர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டையும், வாழ்க்கையில் வெற்றிபெறவும் உயர் கல்வி இன்றியமையாதது என்பதை உணர்ந்து, நிதிநிலை அறிக்கையில் சிறப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டது. அந்த அறிவிப்பின்படி, 'புதுமைப் பெண்' மற்றும் 'தமிழ்ப்புதல்வன்' திட்டங்களின் கீழ் உயர் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மாதந்தோறும் ரூ. 1,000/ உதவித்தொகை வழங்கும் திட்டம் திருநங்கை, திருநம்பி மற்றும் இடைபாலினர் உள்ளிட்ட அனைத்து திருநங்கையர்களுக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இத்திட்டங்களில் பயன்பெறுவதற்கான தகுதி வரம்புகளில் அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை, திருநங்கை, திருநம்பி மற்றும் இடைபாலினர் உள்ளிட்ட அனைத்து திருநங்கையர் களுக்கும் முழுவது மாக நீக்கப்பட்டுள்ளது.

இந்தத் தளர்வின்படி, மேற்கண்ட திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் திருநங்கை, திருநம்பி மற்றும் இடைபாலினர் உள்ளிட்ட அனைத்து திருநங்கையர்க ளும் தமிழ்நாடு திருநங்கை கள் நல வாரியத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையினை சான்றாகச் சமர்ப்பித்து இத்திட் டத்தில் பயன்பெறலாம்.

எனவே, பள்ளிப் படிப்பைப் முடித்து, தற்போது பட்டயம், பட்டயம் மற்றும் தொழிற்படிப்பு பயின்று வரும் திருநங்கை, திருநம்பி மற்றும் இடைபாலினர் உள்ளிட்ட அனைத்து திருநங்கை யர்களும் உயர்கல்வியில் சேர்ந்து, தாங்கள் பயிலும் உயர்கல்வி நிறுவனத்தின் மூலம் 'புதுமைப் பெண்' மற்றும் 'தமிழ்ப்புதல்வன்' திட்டங்களில் UMIS இணையதளம் மூலம் விண்ணப்பித்து, தங்களின் கல்வி இலக்குகளை அடைந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்டவாறு சமூக நல ஆணையர் தெரிவித்துள்ளார்.


**கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. பங்கேற்பு!**

# சென்னை தெற்கு மாவட்டத்தில் பாக நிலை முகவர்கள் (BLA-2) கூட்டம்!

## மாவட்ட செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை தெற்கு மாவட்டத்துக்கு உட்பட்ட சட்டமன்ற தொகுதிகளில் உள்ள பாக நிலை முகவர்கள் (BLA2) கலந்து கொள்ளும் ஆலோசனைக் கூட்டம். கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி தொகுதி வாரியாக நடைபெற உள்ளது.



**விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி -**

**நாள் : 26-6-2025 காலை: 10-00 மணி,**

**இடம்: காமாட்சி திருமண மண்டபம் ஆற்காடு சாலை விருகம்பாக்கம்.**

**மதுரவாயல் சட்டமன்ற தொகுதி -**

**நாள்: 26-6-2025, பகல்: 12-00 மணி, இடம் : சீதாலட்சுமி திருமண மண்டபம், மதுரவாயல்.**

மேற்கண்ட கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. கலந்து கொண்டு தேர்தல் பணி சம்பந்தமாக ஆலோசனை வழங்க உள்ளார். கூட்டத்துக்கான ஏற்பாடுகளை ஐந்து சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதி செயலாளர்கள் ஒன்றிய செயலாளர்கள் நிகழ்ச்சி நிரல்படி பாக நிலை முகவர்களை குறிப்பிட்ட நேரத்தில் பங்கேற்க செய்தும், அந்தந்த தொகுதிக்குட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச்செயற்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், தொகுதிப் பார்வையாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், ஊராட்சிக் கிளைக் கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன்.

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்,**
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.